தினகனி
செய்திகள் மற்றும்விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com


RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 141 | 4 Pages | 19.12.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 141 | 4 பக்கங்கள் | 19.12.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி**
**வலைப்பட்டார் மற்றை யவர்**

**விளக்கம்:**
**முற்றத் துறந்தவரே உயர்ந்த நிலையினர் ஆவர், அவ்வாறு துறக்காத மற்றவர் அறியாமையாகிய வலையில் அகப்பட்டவர் ஆவர்.**

## வங்காளதேசத்தின் சிறுபான்மையினருக்கு ஆதரவாக நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்



புதுடெல்லி, டிச.19

வங்காளதேசத்தில் சில மாதங்களுக்கு முன்பு இட ஒதுக்கீடு சம்பந்தமான மாணவர்கள் போராட்டம் கலவரமாக உருவெடுத்தது. பிறகு அந்தப் போராட்டம் அங்குள்ள சிறுபான்மை இந்துக்கள் மீதான தாக்குதலாக வடிவெடுத்தது. இந்துக்களின் வணிக நிறுவனங்கள் சூறையாடப்பட்டன. இந்துக்கள் பொதுவெளியில் தாக்கப்பட்டனர். கலவர நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பிறகும் கூட வங்கதேசத்தில் இந்துக்கள் மீது மதரீதியான தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், வங்காளதேசத்தில் இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினருக்கு எதிரான அட்டூழியங்களை கண்டித்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் இன்று நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காங்கிரஸ் எம்.பி. பிரியங்காகாந்தி உள்ளிட்ட சுமார் 50 எம்.பி.க்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வங்காளதேசத்தில் இந்துக்களுக்கு எதிராக நடத்தப்படும் அட்டூழியங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும் இவ்விஷயத்தில் மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வங்காளதேச இந்துக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்றும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

மக்களவையில் நேற்று பூஜ்ஜிய நேரத்தின் போது பேசிய பிரியங்கா காந்தி, "வங்காளதேசத்தில் சிறுபான்மையினரான இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான அட்டூழியங்களுக்கு மத்திய அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இதுகுறித்து அந்நாட்டு அரசாங்கத்துடன் விவாதித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய ஆதரவளிக்க வேண்டும்" என்று அவர் கூறினார்.

## ஜார்ஜியாவில் பலியான அனைவரும் பஞ்சாப்பை சேர்ந்தவர்கள் உடல்களை கொண்டு வர காங்கிரஸ் எம்.பி. வலியுறுத்தல்



அமிர்தசரஸ், டிச.19

ஜார்ஜியா நாட்டின் குதவுரி நகரில் மலை பகுதியில் உணவு விடுதி ஒன்று அமைந்துள்ளது. இந்திய உணவு விடுதியான இதன் 2வது தளத்தில் உயிரிழந்தவர்களின் சில உடல்கள் நேற்று கண்டெடுக்கப்பட்டு உள்ளன. இது அதிர்ச்சியை ஏற்படுத்தியது. 12 பேர் பலியாகி உள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றி அந்நாட்டின் பிளிசி நகரில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்ட செய்தியில், உயிரிழந்தவர்களில் 11 பேர் இந்தியாவை சேர்ந்தவர்கள் என தெரிவித்து இருந்தது. ஜார்ஜியாவின் உள்விவகார அமைச்சகம் வெளியிட்ட செய்தியில், தொடக்க விசாரணையில் அவர்களின் உடல்களில் காயங்களோ அல்லது வன்முறை நடந்ததற்கான அடையாளங்களோ காணப்படவில்லை.

அவர்கள் அனைவரும் கார்பன் மோனாக்சைடு விஷ பாதிப்பால் உயிரிழந்து உள்ளனர் என தெரிவித்ததுடன் அவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல்களையும் தெரிவித்து உள்ளது.

இந்நிலையில், காங்கிரஸ் கட்சியை சேர்ந்த அமிர்தசரஸ் தொகுதிக்கான எம்.பி. குர்ஜீத் சிங் ஆஜ்லா இன்று கூறும்போது, ஜார்ஜியாவில் உள்ள உணவு விடுதியில் பலியாகி கிடந்த 12 பேரும் பஞ்சாப்பை சேர்ந்தவர்கள்.

அவர்களின் உடல்களை இந்தியாவுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று முதல்மந்திரி பகவந்த் மான் மற்றும் இந்தியர்கள் அல்லாதோருக்கான விவகாரங்கள் துறை மந்திரியானஆம்ஆத்மியைசேர்ந்தகுல்தீப்சிங்ஆகியோரைவலியுறுத்துகிறேன் என தெரிவித்து உள்ளார்.

## காதல் விவகாரம்: திருமணம் முடிந்த 4 நாட்களில் கணவரை தீர்த்து கட்டிய மனைவி

காந்தி நகர், டிச.19

குஜராத்தின் காந்தி நகர் பகுதியை சேர்ந்தவர் பாயல். இவருக்கு ஆமதாபாத் நகரை சேர்ந்த பவிக் என்பவருடன் சமீபத்தில் திருமணம் நடந்தது. இரண்டு நாட்களுக்கு முன்பு, பெற்றோர் வீட்டில் இருந்த மனைவி பாயலை அழைத்து வருவதற்காக பவிக் புறப்பட்டு சென்றுள்ளார்.

ஆனால், நீண்டநேரம் சென்றும் அவர் வீட்டுக்கு சென்று சேரவில்லை. இதனால், சந்தேகமடைந்த பாயலின் தந்தை, பவிக்கின் தந்தையை தொடர்பு கொண்டு, உங்களுடைய மகன் வீட்டுக்கு வரவில்லை என கூறியிருக்கிறார். இதற்கு பவிக்கின் தந்தை, பவிக் புறப்பட்டு சென்று பல மணிநேரம் ஆகி விட்டது என கூறியிருக்கிறார்.

இதனை தொடர்ந்து, பாயலின் தந்தை மற்றும் அவருடைய குடும்பத்தினர் பவிக்கை தேடி சென்றனர். அப்போது, சாலையில் 2 சக்கர வாகனம் ஒன்று கேட்பாரின்றி கிடந்துள்ளது. அந்த பகுதியில் இருந்தவர்கள் கூறும்போது, 3 பேர் காரில் வந்து, வாகனத்தில் வந்த நபரை கடத்தி சென்றனர் என கூறினர்.

இதுபற்றி பாயலின் குடும்பத்தினர் போலீசில் புகார் அளித்தனர். திருமணம் நடந்த 4 நாட்களில் பவிக் கடத்தப்பட்டது போலீசாருக்கு சந்தேகம் ஏற்படுத்தியது. இதனால், பாயலிடம் விசாரித்ததில் திடுக்கிடும் தகவல் வெளியானது.

பாயல், திருமணத்திற்கு முன்பே உறவினரான கல்பேஷ் என்பவரை காதலித்துவந்துள்ளார். ஆனால், பாயலின்விருப்பத்திற்குஎதிராகஅவருடைய குடும்பத்தினர், பவிக்கிற்கு திருமணம் செய்து வைத்துள்ளனர். இதனால், கணவரை தீர்த்து கட்டுவது என பாயல் முடிவு செய்துள்ளார்.

இதன்படி, பாயலை அழைத்து செல்ல பவிக் வரும்போது, அவரின் இருப்பிடம் பற்றி வழியில் கேட்டு தெரிந்து கொண்ட பாயல் அதனை கல்பேஷிடம் பகிர்ந்திருக்கிறார். இதன்பின்னர் கல்பேஷ், கூட்டாளிகள் 2 பேருடன் சேர்ந்து கொண்டு சொகுசு ரக காரில் வந்து பவிக்கின் வாகனம் மீது மோதியுள்ளார். பவிக் கீழே விழுந்ததும், அவரை காரில் கடத்தி சென்று, கொலை செய்துள்ளனர். பவிக்கின் உடலை நர்மதா கால்வாயில் வீசி விட்டு சென்றனர்.

இந்த விவகாரத்தில், பாயலை போலீசார்காவலில் எடுத்துள்ளனர். கல்பேஷ் உள்ளிட்ட 3 பேர் கைது செய்யப்பட்டனர். புதிய குற்றவியல் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்த போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கலைஞரின் கனவு இல்லம் திட்டத்திற்கு மேலும் ரூ.400 கோடி நிதி ஒதுக்கீடு: முதல்அமைச்சர் அறிவிப்பு

சென்னை, டிச.19

கலைஞரின் கனவு இல்லம் திட்டத்திற்கு மேலும் ரூ.400 கோடி விடுவித்து தமிழ்நாடு அரசு ஆணை வழங்கியுள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:


கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 2024,25ம் ஆண்டில் ஒரு லட்சம் புதிய கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கு ஒரு வீட்டிற்கு ரூ.3,50,000/ வீதம் மொத்தம் ரூ.3,500 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கு அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கிராமப்புற பகுதிகளில் ஏறத்தாழ 8 லட்சம் குடிசை வீடுகள் உள்ளதாக "அனைவருக்கும் வீடு" என்ற கணக்கெடுப்பின் வழியாக கண்டறியப்பட்டதன் அடிப்படையில் "குடிசையில்லாதமிழ்நாடு" என்ற இலக்கினை அடையும் பொருட்டு, எதிர்வரும் 2030ம் ஆண்டிற்குள் ஊரக பகுதிகளில் 6 வருடங்களில் 8 லட்சம் வீடுகள் புதியதாக கட்டித்தர அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி நடப்பு நிதியாண்டில் (202425) ஒரு லட்சம் வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீட்டின் பரப்பளவு, சமையலறை உட்பட, 360 சதுர அடியாகும். பயனாளிகளின் நிதிச்சுமையை குறைக்கும் பொருட்டு இத்திட்டத்தின் கீழ் TANCEM சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பிகள் குறைந்த விலையில் கொள்முதல் செய்யப்பட்டு, துறை மூலம் வழங்கப்படுகிறது. வீட்டின் கட்டுமானத்திற்கு ஏற்ப தரைமட்ட நிலை, ஜன்னல் மட்ட நிலை, கூரை வேயப்பட்ட நிலை மற்றும் பணிமுடிவுற்ற பின் என நான்கு தவணைகளில் ஒற்றை ஒருங்கிணைப்பு வங்கி கணக்கின் (Single Nodal AccountSNA) மூலம் தொகை நேரடியாக பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டு வருகிறது. இதுவரை தமிழ்நாடு அரசால் ரூ.1,051.34



கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, பயனாளிகளுக்கு வீட்டின் கட்டுமான நிலைக்கு ஏற்ப ரூ.860.31 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், துறை மூலம் வழங்கப்படும் சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பிகளுக்கு (Steel) என ரூ.135.30 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் ரூ.995.61 கோடி இதுவரை கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கலைஞரின் கனவு இல்லம் திட்டம் மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒரு லட்சம் வீடுகளும் விரைவாக கட்டப்பட்டு வருகிறது. இதனை கருத்தில் கொண்டு, வீடுகளின் கட்டுமான பணிகளை துரிதப்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு அரசு மேலும் ரூ.400 கோடி விடுவித்து ஆணை வழங்கியுள்ளது. தற்போது வரப்பெற்றுள்ள ரூ.400 கோடியும் சேர்ந்து மொத்தம் ரூ.1,451.34 கோடி பெறப்பட்டு கட்டுமான நிலைக்கு ஏற்ப பயனாளிகளின் வங்கிகணக்கிற்கு நேரடியாக தொகை விடுவிக்கப்பட்டு வருகிறது. இந்நிதியாண்டிற்குள் அனைத்து வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர தமிழ்நாடு அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# ஆ.இரா.வேங்கடாசலபதிக்கு சாகித்ய அகாடமி விருது அறிவிப்பு




சென்னை, டிச.19

2024ம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருது பெற்றவர்களின் பட்டியல் இன்று வெளியாகியிருக்கிறது. மொத்தம் 24 மொழிகளில் 21 மொழிகளுக்கான விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

எட்டு கவிதைத் தொகுப்புகள், மூன்று நாவல்கள், இரண்டு சிறுகதைத் தொகுப்புகள், மூன்று கட்டுரைகள், மூன்று இலக்கிய விமர்சன நூல்கள் மற்றும் ஒரு நாடகம் ஆகியவற்றுக்கு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, வரலாற்றுப் பேராசிரியர், எழுத்தாளர் ஆ.இரா. வேங்கடாசலபதி எழுதிய திருநெல்வேலி எழுச்சியும், வ.உ.சி.யும் 1908 என்ற நூலுக்கு சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது. விருதுடன் 1 லட்சம் ரூபாய் பரிசாக வழங்கப்படுகிறது.

ஆ.இரா.வேங்கடாசலபதி தமிழகத்தின் ஆய்வாளர்களுள் ஒருவர். இவர், புதுமைப்பித்தனின் எழுத்துக்களைச் செம்பதிப்பாகத் தொகுத்துள்ளார். கடந்த 30 ஆண்டுகளில் தமிழ் வரலாற்று, பண்பாடடுத்துறைக்கு முக்கியமான 25க்கும் மேற்பட்ட புத்தகங்களைக் கொடுத்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொங்கல் சிறப்பு தொகுப்பு விற்பனை தொடக்கம்

சென்னை, டிச.19

தமிழக கூட்டுறவுத் துறை சார்பில் பொங்கல் சிறப்புத் தொகுப்பு விற்பனையை அமைச்சர் பெரியகருப்பன் இன்று தொடங்கி வைத்தார். சென்னை தேனாம்பேட்டையில் உள்ள காமதேனு கூட்டுறவு அங்காடியில் வாடிக்கையாளர்களுக்கு பொங்கல் சிறப்புத் தொகுப்பு வழங்கி அவர் விற்பனையை தொடங்கி வைத்தார். இன்று முதல் கூட்டுறவு அங்காடிகளில் பொங்கல் சிறப்புத் தொகுப்பு விற்பனை செய்யப்படுகிறது.



பச்சரிசி, வெள்ளம், ஏலக்காய், முந்திரி, உலர்திராட்சை, நெய், பாசிப்பருப்பு என ஏழு பொருள்கள் அடங்கிய இனிப்பு பொங்கல் தொகுப்பு ரூ.199க்கு விற்பனை செய்யப்படுகிறது. மஞ்சள் தூள், சர்க்கரை, துவரம் பருப்பு, கடலைப்பருப்பு, பாசிப்பருப்பு, தனியா, புளி, பொட்டுக்கடலை, மிளகாய் தூள், கடலை எண்ணெய், உளுந்தம் பருப்பு உள்ளிட்ட 35 பொருட்கள் அடங்கிய சிறப்பு பொங்கல் தொகுப்பு ரூ.499க்கு விற்பனை செய்யப்படுகிறது.

# 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் தமிழ் பாடம் கட்டாயம் இல்லையா? தமிழக அரசு விளக்கம்

சென்னை, டிச.19

202425 கல்வி ஆண்டுக்கான பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு வருகிற மார்ச் மாதம் 28ந்தேதி தொடங்கி ஏப்ரல் 15ந்தேதி வரை நடைபெற உள்ளது. இந்த ஆண்டு பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் தமிழ் பாடம் கட்டாயம் இல்லை எனகல்வித்துறை அறிவித்துள்ளது என்றும், சிறுபான்மை மொழிகளில் தேர்வை எழுதிக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டு உள்ளதாகவும் சமூக வலைதளங்களில் தகவல் வேகமாக பரவி வருகிறது. இதை பலரும் பகிர்ந்து வருகின்றனர். இதனை தமிழக அரசு மறுத்துள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் விளக்கம் அளித்துள்ளது. அதில், "பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் தமிழ் பாடம் கட்டாயமில்லை என அரசு அறிவித்ததாக பொய் பரப்பப்படுகிறது. தமிழக அரசு கடந்த 2006ம் ஆண்டு கட்டாய தமிழ் கற்றல் சட்டத்தின் மூலம் அனைத்து வகையான பள்ளிகளிலும் முதல் பாடமாக தமிழ் அறிவிக்கப்பட்டது.




இதுதொடர்பான வழக்கில் மொழிவாரி சிறுபான்மை பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் தமிழ் பாட தேர்வு எழுதுவதில் இருந்து 2020 முதல் 2022ம் ஆண்டு வரை சென்னை ஐகோர்ட்டு விலக்கு அளித்து இருந்தது. இதை உறுதி செய்த சுப்ரீம் கோர்ட்டு தேர்வில் விலக்கு என்பது 2023ம் ஆண்டுக்கும் பொருந்தும் என தீர்ப்பளித்துள்ளது.

இந்த நிலையில், மொழி சிறுபான்மை பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்கள் நியமனங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தமிழக மொழி சிறுபான்மை பேரவையினரின் கோரிக்கையை ஏற்று 202324 கல்வியாண்டுக்கு மட்டும் கட்டாய மொழிப்பாடமான தமிழ் தேர்வு எழுதுவதில் விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. இதை பொதுவாக அனைத்து மாணவர்களுக்கும் அறிவித்ததாக தவறான தகவல்கள் பரப்பப்படுகின்றன. இதுபோன்ற தகவல்களை நம்ப வேண்டாம்" என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

தினகனி



# தாறுமாறாக ஓடிய கார் மோதி 4 பேர் காயம்

சென்னை, tisa.19

சென்னை வேளச்சேரி 100 அடி சாலையில் சென்று கொண்டிருந்த கார் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடி வாகனங்கள் மீது மோதியதில் பயங்கர விபத்து நேரிட்டது.



தாறுமாறாக ஓடிய கார் சாலையில் சென்றுகொண்டிருந்த ஆட்டோ, பைக், சாலையோரம் டிரை சைக்கிளில் இளநீர் கடை வைத்திருந்த நபர் உள்பட 4 பேர் மீது பயங்கரமாக மோதியது. இதில் காயமடைந்த 4 பேர் சென்னை ராயப்பேட்டை மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காரை ஓட்டி வந்த பிரகதீஷ் (வயது 29) என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் திருவொற்றியூர் பகுதியை சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது. இவருக்கு எந்தவித காயமும் ஏற்படவில்லை.

விபத்து குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

முதற்கட்ட விசாரணையில் காரை அதிவேகமாக ஓட்டி வந்ததே இந்த விபத்துக்கு காரணம் என்று கூறப்படுகிறது. இவர் குடிபோதையில் இருந்தாரா என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

விபத்து நடந்த இடத்தில் இருக்கும் சிசிடிவி காட்சிகளை சேகரித்து போலீசார் விசாரணை தொடங்கி உள்ளார்கள்.

# தீபமலை மீது சிக்கி தவித்த ஆந்திர பெண்ணை மீட்டு முதுகில் சுமந்து வந்த வனக்காப்பாளர்

திருவண்ணாமலை, டிச.19

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில் பஞ்சபூத ஸ்தலங்களில் அக்னி ஸ்தலமாக விளங்குகிறது. இந்த கோவிலுக்கு தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்கின்றனர். இந்த நிலையில் கோவிலில் நடைபெற்ற கார்த்திகை தீபத் திருவிழாவின் சிகர நிகழ்ச்சியாக மகா தீபம் கடந்த 13ந் தேதி மாலையில் கோவில் பின்புறம் உள்ள மலை உச்சியில் ஏற்றப்பட்டது.



தொடர்ந்து 14ந் தேதி மாலை முதல் நேற்று முன்தினம் மாலை வரை பவுர்ணமி என்பதால் திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் கடந்த 13ந் தேதி முதல் நேற்று முன்தினம் வரையில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. மகாதீபம் மற்றும் பவுர்ணமியையொட்டி லட்சக்கணக்கான பக்தர்கள் அருணாசலேஸ்வரர் கோவிலில் சாமி தரிசனம் செய்தனர்.

இந்த நிலையில் திருவண்ணாமலை மகாதீபத்தின்போது மலையேற பொதுமக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், ஆந்திராவை சேர்ந்த அன்னபூர்ணா என்ற பெண், அத்துமீறி மலை மீது ஏறியுள்ளார். இதையடுத்து திரும்ப வரத் தெரியாமல் 2 நாட்களாக தீப மலை மீது தவித்து வந்துள்ளார். அதனை தொடர்ந்து அந்த பெண் இருப்பிடத்தை கண்டுபிடித்த வனக்காப்பாளர்கள் அங்கு சென்று அவரை பாதுகாப்பாக மீட்டனர்.

பின்னர் மலை இறங்க முடியாமல் சோர்வாக இருந்த பெண்ணை வனக்காப்பாளர் ஒருவர் தனது முதுகில் சுமந்து மலைக்கு கீழே கொண்டு வந்தார். வனக்காப்பாளரின் இந்த செயலுக்கு பலரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர். மேலும் இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# வேலூரில் பிரசவத்தின்போது சென்னை போலீஸ்காரரின் மனைவி, குழந்தை பலி பரபரப்பு புகார்

வேலூர், டிச.19

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அருகே உள்ள இரும்பேடு கிராமத்தை சேர்ந்தவர் கோடீஸ்வரன். இவர் ஆவடி ஆயுத படையில் போலீசாக பணிபுரிந்து வருகிறார்.

இவரது மனைவி அனிதா (வயது 24). கர்ப்பமாக இருந்தார். இவர் கடந்த 12ந்தேதி வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டார்.

பிரசவத்திற்காக வழங்கப்பட்ட தேதி கடந்து சென்றதால் தன் மனைவிக்கு அறுவை சிகிச்சை செய்தாவது பிரசவம் பார்க்கும்படி அனிதாவின் கணவர் மருத்துவமனையை அணுகி கேட்டுள்ளார். இதற்கு மருத்துவமனை நிர்வாகம் சார்பாக அலட்சியமாக பதில் அளித்ததாக கூறப்படுகிறது.

நேற்று காலை அனிதா தனக்கு பிரசவ வலி ஏற்பட்டதாக கூறினார். நேற்று மாலை பிரசவத்துக்கான சிகிச்சையை மருத்துவர்கள் தொடங்கினர். தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் இன்று காலை பிரசவத்தின் போது ஆண் குழந்தை இறந்தே பிறந்தது. அதன் பின்னர் சிறிது நேரத்தில் தாயும் இறந்தார்.



இதனைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த அனிதாவின் உறவினர்கள் டாக்டர்களுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்களால் தான் தன் மனைவியும், தன் குழந்தையும் இறந்துள்ளதாக கோடீஸ்வரன் வேலூர் தாலுகா போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தார். இதுகுறித்து போலீசார் மற்றும் சுகாதார துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# உலக செஸ் சாம்பியன் குகேஷ் உருவத்தை தண்ணீர்பழத்தில் செதுக்கிய வாலிபர்

கூடலூர், டிச.19

சிங்கப்பூரில் நடந்த உலக செஸ் சாம்பியன் ஷிப் போட்டியில் சென்னையை சேர்ந்த குகேஷ் இந்தியா சார்பில் கலந்து கொண்டு பட்டம் வென்றார்.

இதன் மூலம் இளம்வயதில் உலக செஸ் சாம்பியன்ஷிப் பட்டம் வென்றவர் என்ற புதிய சாதனையை படைத்துள்ளார்.

அவருக்கு பிரதமர் மோடி, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், நடிகர் ரஜினிகாந்த் மற்றும் இந்தியாவில் உள்ள பல்வேறு அரசியல் கட்சியினர், விளையாட்டு ஆர்வலர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

அவரது சாதனையை கவுரவிக்கும் வகையில் தேனி மாவட்டம் கூடலூரை சேர்ந்த சிற்பி இளஞ்செழியன் என்பவர் தர்ப்பூசணியில் குகேஷின் உருவத்தை வரைந்துள்ளார். இந்தியாவின் இளம் வயது செஸ் சாம்பியனுக்கு வாழ்த்துக்கள் என்று அதில் பதிவிட்டுள்ளார்.




இதனை பார்வையிட்ட அப்பகுதி மக்கள் மற்றும் பல்வேறு தரப்பினர் இளஞ்செழியனுக்கு பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர். இந்த வீடியோ தற்போது சமூக வலைதளங்களிலும் வைரலாகி வருகிறது.

இவர் ஏற்கனவே அப்துல்கலாம், இஸ்ரோ தலைவர் உள்ளிட்ட பல்வேறு பிரபலங்களை தர்ப்பூசணியில் செதுக்கி பாராட்டு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# குப்பைகளை லாரிகளில் ஏற்றிச்சென்று கேரளாவில் கொட்டுவோம் அண்ணாமலை

சென்னை , டிச.19

பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், காவிரி நீர் உள்ளிட்ட தமிழகத்தின் உரிமைகளை தனது கூட்டணிக் கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு விட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கேரள மாநிலத்தின் எல்லையோர மாவட்டங்களான கன்னியாகுமரி, தென்காசி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களை, கேரள கம்யூனிஸ்ட் அரசின் குப்பைக் கிடங்காக மாற்றவும் அனுமதித்திருக்கிறார். கேரள கம்யூனிஸ்ட் அரசுடன் திமுக அரசு உறவாடிக் கொண்டிருக்கும் அதே வேளையில், கேரள மாநிலத்தின் பயோமெடிக்கல், பிளாஸ்டிக் மற்றும் இறைச்சிக் கழிவுகளின் குப்பைக் கிடங்காக நமது தென்மாவட்டங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. தினம் தினம் லாரிகளில் கொண்டு வந்து கொட்டப்படும் இந்தக் கழிவுகளைத் தடுத்து நிறுத்த வேண்டிய சோதனைச் சாவடிகள், வெறும் வசூல் மையங்களாக மட்டுமே மாறிவிட்டன. ஒருபுறம் தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இருந்து கேரள மாநிலத்துக்குச் சட்டவிரோதமாக கனிமங்கள் கடத்தப்படுவதைக் கண்டும் காணாததுபோல் இருக்கும் திமுக அரசு, மறுபுறம் தமிழகத்தை குப்பை கொட்டும் இடமாகப் பயன்படுத்திக்கொள்ள சுதந்திரமான அனுமதி அளித்துள்ளது. அதிகாரிகளிடமும், முதலமைச்சர் தனிப்பிரிவுக்கும் பலமுறை புகார் அளித்தும், இதனைத் தடுத்து நிறுத்த எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. முழுக்க முழுக்க திமுக அரசுக்குத் தெரிந்தே இவை நடைபெறுகின்றன.

உடனடியாக, கேரள மாநிலத்தின் குப்பைக் கிடங்காக தமிழக எல்லையோர மாவட்டங்கள் மாற்றப்படுவதைத் திமுக அரசு தடுத்து நிறுத்த வேண்டும். இனியும் இதே போன்ற நிகழ்வுகள் தொடர்ந்தால், வரும் 2025 ஜனவரி முதல் வாரத்தில், பொதுமக்களைத் திரட்டி, இந்த உயிரியல் மருத்துவக் கழிவுகள் மற்றும் குப்பைகளை லாரிகளில் ஏற்றிச் சென்று, கேரளாவில் கொண்டு கொட்டுவோம். முதல் லாரியில் நானும் செல்வேன் என்பதைத் திமுக அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அண்ணமலை கூறியுள்ளார்.

# மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா பேருந்து பயண டோக்கன் 21ந்தேதி முதல் வழங்கப்படும்

சென்னை, டிச.19

சென்னையை சேர்ந்த மூத்த குடிமக்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணடோக்கன் வழங்கப்பட்டு வருகிறது.

இச்சேவைகளை பெற விரும்பும் மூத்த குடிமக்கள் தங்கள் இருப்பிட சான்றாக குடும்ப அட்டை, வயது சான்று (ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம், கல்வி சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை) மற்றும் 2 வண்ண புகைப்படங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.



இந்நிலையில் மாநகர போக்குவரத்துக்கழகம் மேலாண் இயக்குநர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சென்னை மாநகர பேருந்துகளில் மூத்த குடிமக்கள் கட்டணமில்லாமல் பயணிக்க வரும் 21ந்தேதி முதல் டோக்கன்கள் வழங்கப்படும்.

அடுத்த ஆண்டு ஜனவரி முதல் ஜூன் வரை பேருந்துகளில் மூத்தோர்கள் இலவசமாக பயணிக்க டோக்கன்கள் வழங்கப்பட உள்ளது.

ஒரு மாதத்திற்கு 10 டோக்கன்கள் வீதம் 6 மாதங்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயண டோக்கன்கள் வழங்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெண் தேடும் இளைஞர்களை குறிவைத்து மெகா மோசடி: 7 பேர் கும்பல் வசமாக சிக்கிய பகீர் பின்னணி

சென்னை, டிச.19

'மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்', என்ற பாடல் வரிகள் பலரது வாழ்வில் கேட்க மட்டுமே முடிகிறது, அமைவது கிடையாது. அதற்கு காரணம் திருமண பந்தம், பாசம் உள்ளிட்ட அனைத்தும் பணத்தை பிரதானமாக கொண்டு நிர்ணயம் செய்யப்படுவதாகி விட்டது. நில மோசடி, கடன் மோசடி, நகை மோசடி பட்டியலில் தற்போது பிரபலமாகி வருவது திருமண மோசடி.



குடும்ப சூழல், வாழ்க்கை பின்னணி, பொறுப்புகளை தாங்கி நிற்கும் ஆண்களின் நிலை அறிந்து அவர்களை மூளைச்சலவை செய்து நடைபெறும் மோசடிகள் எங்காவது நடந்ததாக வந்த தகவல்கள் தற்போது அடிக்கடி நிகழ்வாகி போனது. அதிலும் பல்வேறு வழிகளில் நூதனமாக செயல்படும் கும்பலால் விழிபிதுங்கி நிற்போர் ஏராளம்.

இதில் பணம், பொருட்களை இழந்து வாடும் பலர் தங்களது இயலாமையை வெளி உலகுக்கு சொல்ல முடியாமல் போவதுதான் மோசடி கும்பலை சேர்ந்தவர்களை ஊக்கப்படுத்துகிறது. அப்படியொரு மோசடிக்கு அடித்தளமிட்ட நிலையில் சுதாரித்துக்கொண்ட தாயால் மகனின் மண வாழ்க்கை அதிர்ஷ்டவசமாக தப்பியுள்ளது. அது பற்றிய விபரம் வருமாறு:

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் திருமணத்திற்கு பெண் தேடும் இளைஞர்களை குறிவைத்து நடத்தப்பட்ட நூதன மோசடி பொதுமக்களை அதிர்ச்சி அடையச் செய்துள்ளது.

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே உள்ள பூதிப்புரம் கிராமத்தைச் சேர்ந்தவர் பெருமாயி (வயது 58). மற்ற பிள்ளைகளுக்கு திருமணம் வைத்து முடித்த பெருமாயி கடைக்குட்டியான தனது மகன் முருகனுக்கும் மணம் முடிக்க ஏற்பாடுகளை செய்து வந்தார். வயதான காலத்தில் தேடிப்போய் பெண் பார்க்க இயலாத நிலையில், அதற்கான பொறுப்பை புரோக்கரிடம் கொடுத்து பெருமாயி வரன் தேடி வந்தார்.

இதனை அறிந்த பொள்ளாச்சியை சேர்ந்த விஜயா என்ற பெண், அவருக்கு சமீபத்தில் அறிமுகமாகியுள்ளார். தன்னிடம் ஏராளமான வரன்கள் இருக்கிறது. எனவே உங்கள் மகனுக்கு அவரது விருப்பப்படி நல்ல மனைவி கிடைப்பார். அதனை அமைத்து கொடுக்கத் தானே நாங்கள் இருக்கிறோம் என்று நம்பிக்கை வார்த்தைகளை உறவினர்களை விஞ்சும் அளவுக்கு பெருமாயி மனதில் விதைத்துள்ளார்.

திருமணத்திற்காக தனக்கு புரோக்கர் கமிஷனாக ரூ.1 லட்சத்து 30 ஆயிரம் வழங்க வேண்டும் என்றும் விஜயா தெரிவித்துள்ளார். இதை நம்பிய பெருமாயி பணம் வழங்க ஒப்புக்கொண்டார். இதையடுத்து, திருப்பூரைச் சேர்ந்த பெண் ஒருவருடன் முருகனுக்கு திருமணம் நடைபெற்றது. விஜயாவுக்கு ஒப்புக்கொண்டதைப்போல, ரூ.1 லட்சத்து 30 ஆயிரத்தை சந்தோஷத்துடன் பெருமாயி வழங்கினார்.

புதிய மண வாழ்க்கை அமைந்த சந்தோஷத்தில் இருந்த முருகனுக்கு மறுநாள் காலை பெரும் அதிர்ச்சியாகவே விடிந்தது. மனைவி என்று வந்த பெண்ணும், அவரது உறவினர்களும் இரவோடு இரவாக நகை, பணத்துடன் கம்பி நீட்டியதைக் கண்டு அவரும், அவரது தாய் பெருமாயியும் அதிர்ச்சியடைந்தனர். புலம்பி அழுத பெருமாயி மகனின் வாழ்க்கையை நாமே பாழடித்து விட்டோமே என்று கதறினார்.

எனினும், தங்களது குடும்ப மானத்தை காக்கும் பொருட்டு, அவர்கள் போலீசில் புகார் அளிக்கவில்லை என்று கூறப்படுகிறது. எனினும் இதுகுறித்து பெருமாயி, விஜயாவிடம் புகார் தெரிவித்துள்ளார். இதை வருத்தம் கலந்த முகத்தோடு கேட்டுக் கொண்ட விஜயா, தன்னால் ஏற்பட்ட இந்த அவமானத்திற்கு தானே பொறுப்பேற்பதாகவும், விரைவில் மற்றொரு பெண்ணை அழைத்து வந்து திருமணம் நடத்தி வைப்பதாகவும் பெருமாயியை சமாதானப்படுத்தி உள்ளார்.

அதன்படி, அருப்புக்கோட்டையைச் சேர்ந்த அருணாதேவி (39) என்ற பெண்ணை அழைத்து வந்த விஜயா அவரை முருகனுக்கு திருமணம் செய்து வைப்பதாகவும், அதற்காக தனக்கு மீண்டும் தனக்கு ரூ.1 லட்சம் கமிஷன் வழங்க வேண்டும் என்று கூறியுள்ளார். விஜயாவின் நடவடிக்கைகளில் சந்தேகமடைந்த பெருமாயி, விஜயாவையும், அவருடன் வந்த அருணாதேவி மற்றும் தூத்துக்குடி வ.உ.சி. நகரைச்சேர்ந்த காளீஸ்வரி (52) ஆகியோரை அருகில் இருந்தவர்கள் உதவியுடன் கையும், களவுமாக பிடித்து, உசிலம்பட்டி போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தார். ஒருமுறை ஏமாந்தது போதும், இனி மேலும் ஏமாறக்கூடாது என்ற வகையில் பெருமாயி எடுத்த முடிவு மகனின் மண வாழ்க்கை மீண்டும் பறிபோவதை தடுத்தது.


பெருமாயி அளித்த புகாரின் அடிப்படையில், போலீசார் நூதன மோசடியில் ஈடுபட்ட பொள்ளாச்சியைச் சேர்ந்த விஜயா என்ற ஜெயா, தூத்துக்குடியை சேர்ந்த காளீஸ்வரி, அருப்புக்கோட்டையைச் சேர்ந்த அருணாதேவி மற்றும் பொள்ளாச்சி மற்றும் திருப்பூரைச் சேர்ந்த சீனிவாசன், ஜெயபாரதி, சுஜித்ரா, முரளிதரன் ஆகிய 7 பேர் மீது வழக்கு பதிவு செய்து விஜயா, காளீஸ்வரி, அருணாதேவி ஆகிய 3 பேரை கைது செய்து, தொடர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருமணம் செய்ய பெண் தேடும் இளைஞர்களை குறி வைத்து திருமணம் முடிந்த கையோடு பணம், நகையை கொள்ளையடித்து செல்லும் நூதன மோசடி கும்பல் கைது செய்யப்பட்ட சம்பவம் உசிலம்பட்டியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தலையில் கல்லை போட்டு 2 வடமாநில இளைஞர்கள் கொலை நாமக்கல்லில் பயங்கரம்

நாமக்கல், டிச.19

நாமக்கல் மாவட்டம் வெப்படை அருகே வடமாநில இளைஞர்கள் இருவர் தலையில் கல்லை போட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. கொல்லப்பட்ட இருவரும் ஒடிசா மாநிலத்தை சேர்ந்த முன்னா மற்றும் துகிலேஷ் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



இருவரின் உடல்களும் பாதரை என்ற பகுதியில் இருந்ததாக போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார், இருவரின் உடல்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளனர்.

வடமாநில இளைஞர்கள் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ராஜேஷ் கண்ணன் விசாரணை மேற்கொண்டு வருகிறார்.

சம்பவ இடத்தில் கைரேகை நிபுணர்கள் மோப்பநாய் உதவியுடன் தடயங்களை சேகரித்துள்ளனர்.

எதற்காக கொலை நடைபெற்றது என்பது குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# சிறைச்சாலைகளில் போதைப் பொருட்கள் புழக்கம் ஓபிஎஸ் குற்றச்சாட்டு

சென்னை, டிச.19

முன்னாள்முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், பொது இடங்களில் புழக்கத்தில் இருந்து வந்த போதைப் பொருட்களின் நடமாட்டம் தற்போது சிறைச்சாலைகளுக்குள்ளேயும் புகுந்துவிட்டதாகவும், சிறைச்சாலைகளுக்குள்ளேயே கைபேசி மூலம் பேச வேண்டியவர்களுடன் பேசி, எதிரிகளை தீர்த்துக்கட்ட திட்டங்கள் தீட்டப்படுவதாகவும் தகவல்கள் வருகின்றன.

பூந்தமல்லி சிறையில் கைதிகள் அறைகளிலிருந்து ஸ்மார்ட் போன்கள், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டதாகவும், துணை ஜெயிலர், உதவி ஜெயிலர், தலைமைக் காவலர் உள்ளிட்ட 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், கூறப்படுகிறது. இந்த நிலைமை நீடித்தால், சட்டம் ஒழுங்கு சீரழிந்து காவல் துறையினரின் உயிருக்கே ஆபத்து ஏற்படும் சூழ்நிலை உருவாகும். எனவே முதலமைச்சர் இதில் தனிக்கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# தமிழ்நாட்டை குப்பை நாடாக மாற்றி கொண்டு இருக்கும் கேரளா அரசுக்கு பிரேமலதா கண்டனம்



சென்னை, டிச.19

வங்கக்கடலின் மத்திய பகுதிகளில் நிலவிய காற்ற ழுத்த தாழ்வு பகுதி நேற்று தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவியது. இது, அடுத்த இரு தினங் கள்மேலும் வலுப்பெற்று, மேற்குவடமேற்கு திசை யில், தமிழக கடலோரப் பகுதிகளை நோக்கி நகரக் கூடும்.

இதனால் வடகடலோர தமிழகத்தில்அநேக இடங் களிலும், இதர தமிழகத் தில் ஒருசில இடங்களி லும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளி லும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித் துள்ளது.

சென்னை, செங்கல் பட்டு, திருவள்ளூர், காஞ் சிபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மற்றும் புது வையில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

# கஞ்சா பதுக்கியதாக வழக்கு சவுக்கு சங்கருக்கு பிடிவாரண்ட்



மதுரை, டிச.19

பிரபல யூடியூபர் சவுக்கு சங்கர், பெண் போலீஸ் குறித்தும், போலீஸ் அதி காரிகள் பற்றியும் பாலி யல் தொடர்பான அவதூறு கருத்துகளை தெரிவித்த தாக கடந்த சில மாதங்க ளுக்கு முன்பாக புகார்கள் எழுந்தன. அதன்பேரில் கோவை போலீசார் வழக் குப்பதிவு செய்து அவரை கைது செய்தனர்.

தேனியில் தங்கி இருந்த அவர், கஞ்சா பதுக்கிய தாக பழனிசெட்டிபட்டி போலீசார் மற்றொரு வழக்கை பதிவு செய்தனர். இந்த வழக்கிலும் அவர் கைதானார். கஞ்சா பதுக் கிய சம்பவம் தொடர்பான வழக்கு மதுரை போதை பொருள் தடுப்பு பிரிவு சிறப்பு கோர்ட்டில் விசா ரிக்கப்பட்டு வருகி றது.

இந்த வழக்கு விசார ணையின்போது சவுக்கு சங்கர் ஆஜராகி வந்தார். கடந்த சில விசாரணைக்கு அவர் ஆஜராகவில்லை. இந்த நிலையில் இந்த வழக்கு இன்று நீதிபதி செங்கமல செல்வன் முன்பு விசாரணைக்கு வந் தது. அப்போதும் சவுக்கு சங்கர் கோர்ட்டில் ஆஜரா கவில்லை. இதனால் சவுக்கு சங்கரை கைது செய்து கோர்ட்டில் ஆஜர் ப டு த் து ம் ப டி பிடிவாரண்டு பிறப்பித்து நீதிபதி உத்தரவிட்டார்.

# சென்னை துறைமுகத்தில் ரிவர்ஸ் எடுக்கும் போது கடலில் விழுந்த கார்



சென்னை, டிச.19

சென்னை துறைமு கத் தில் கடற்படை வீரர்களை அழைத்து வர நேற்று இரவு கார் சென்றது. அந்த காரை முகமது சகி என்ற டிரைவர் ஓட்டியுள்ளார்.

துறைமுகத்தில் வீரர் களை ஏற்றிக்கொண்டு ரிவர்ஸ் எடுத்தபோது கார் கடலில் விழுந்தது. இதை யடுத்தும் காரில் இருந்த கடற்படை வீரர் காயங்க ளுடன் உயிர் தப்பினார்.

ஆனால், கார் டிரைவர் முகமது சகி கடலில் விழுந்து மாயமானார். அவரை தேடும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

அதேவேளை, காயம டைந்த கடற்படை வீரர் மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது.

# ஈரோடு கிழக்கு தொகுதி காலியானதாக அறிவிப்பு பிப்ரவரியில் இடைத்தேர்தல்?






ஈரோடு, டிச.19

ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினரான ஈ.வி.கே.எஸ். இளங்கோ வன் மறைவை அடுத்து அத்தொகுதி காலியான தாக அறிவித்து தேர்தல் ஆணையத்துக்கு சட்ட சபை செயலகம் தகவல் தெரிவித்துள்ளது.

இதனைத்தொடர்ந்து ஜனவரி அல்லது பிப்ரவரியில் டெல்லிக்கு நடைபெற உள்ள சட்ட மன்ற தேர்தலோடு ஈரோடு கிழக்கு தொகுதிக்கும் தேர் தல் நடத்த வாய்ப்பு உள்ள தாக கூறப்படுகிறது. இத னால் தமிழக தேர்தல் வரலாற்றில் ஒரே ஆட்சி யில் மூன்றாவது முறை யாக ஈரோடு கிழக்கு சட்ட மன்ற தொகுதி வாக்காளர்கள் வாக்களிக்க போகின்றனர்.

முன்னதாக, 2021ம் ஆண்டு நடைபெற்ற சட்ட சபை தேர்தலில் ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் ஈவி கேஎஸ் இளங்கோவனின் இரண்டாவது மகனான ஈவேராதிருமகன் போட்டி யிட்டு வெற்றி பெற்று முதன் முறையாக சட்டச பைக்குள் நுழைந்தார். இருப்பினும் இந்த ஆண்டு ஜனவரி மாதம் மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார். இதன் பின் நடைபெற்ற இடைத்தேர்தலில் ஈ.வி. கே.எஸ்.இளங்கோவன் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

சமீபத்தில், ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினரும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலை வருமான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் உடல்நலக் குறைவால் மருத்துவம னையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த 14 ந்தேதி காலமானார்.

# காலை உணவுத் திட்டம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர்



சென்னை, டிச.19

காலை உணவுத் திட்டத் திற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந் தித்து பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் நன்றி தெரிவித் துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் ,

தமிழ்நாடுமுதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்க ளின் காலை உணவுத் திட் டத்தை உலகமே பின்பற்றி வரும் நிலையில், மாநில திட்டக் குழு வெளியிட் டுள்ள ஆய்வறிக்கையில் "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினால் ப ள் ளி க ளு க் கு குழந்தைகள் குறித்த நேரத் தில் வருவது அதிகரித்துள் ளது என்றும், 90 சதவிகி தத்திற்கும் மேலான குழந்தைகளின் நினை வாற்றல் அதிகரித்துள் ளது" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சீரிய திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வரும் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாணவர் கள் மற்றும் பெற்றோர்க ளின் சார்பாக நினைவு பரிசு வழங்கி, நன்றிக ளைத் தெரிவித்துக் கொண்டோம் என தெரி வித்துள்ளார் .

# பைக் டாக்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆட்டோ டிரைவர்கள் ஆர்ப்பாட்டம்



கோவை, டிச.19

கோவையில் ஆட்டோ டிரைவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியு றுத்தி தொடர்ந்து போராட் டம் நடத்தி வருகின்றனர்.

அந்த வகையில் இன்று கோவை உக்கடம் பஸ் நிலையம் அருகே, மாவட்ட ஆட்டோ தொழி லாளர் அனைத்து சங்க கூட்டமைப்பு சார்பில் பைக் டாக்ஸி முறையை தடை செய்ய வலியுறுத்தி ஆட்டோ டிரைவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டனர். ஆர்ப்பாட்டத்திற்கு கூட்டு கமிட்டி தலைவர் செல்வம், சி.ஐ.டி.யு. பொதுச்செயலாளர் சிவாஜி தலைமை தாங்கி னார். இதில் அ.தி.மு.க. அண்ணா தொழிற்சங்க ஆட்டோ டிரைவர்கள் மற் றும் ஏராளமான ஆட்டோ டிரைவர்கள் உள்பட 400க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழகம் முழுவதும் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட ஆட்டோக்கள் இயக்கப்ப டுகிறது. தற்போது அமைச் சர் சிவசங்கர் பைக் டாக்ஸி ஓட்ட அனுமதி அளித்து உள்ளது மன வருத்தத்தை ஏற்படுத்தி உள்ளது.

இதனால், எங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப் பட்டு உள்ளது. இந் தி ய ா மு ழு வ தும் எங் கும் பைக் ட ா க் ஸி இல்லை. எனவே, பைக் டாக்ஸி இயக்கும் அனுமதியை தமிழக அரசு ரத்து செய்ய வேண்டும். டாக்ஸிக ளுக்கு அனுமதி என்றால் ஆ ட் டோ க் க ளு க் கு வெள்ளை போர்டு அனு மதி வழங்க வேண்டும். எங்களது அடுத்தகட்ட போராட்டத்தை மிகப்பெ ரிய அளவில் நடத்த உள் ளோம். மேலும் 13 ஆண் டு க ள ா க உயர்த்தப்படாமல் உள்ள ஆட்டோ மீட்டர் கட்ட ணங்களையும் உயர்த்த வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர். ஆட்டோ டிரைவர்கள் போராட்டத்தையொட்டி, அந்த பகுதியில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது.

# பூக்கள் விலை கடும் உயர்வு மல்லி கிலோ ரூ.2500க்கு விற்பனை



போரூர், டிச.19

கோயம்பேடு மார்க் கெட்டிற்கு வழக்கமாக ஓசூர், சேலம், ஆந்திரா மாநிலம்கடப்பா, வேலூர், திருவள்ளூர் ஆகிய பகுதி களில் இருந்து தினசரி 45 க்கும் அதிகமான வாகனங் களில் பூக்கள் விற்பனைக்கு வரும்.

ஆனால் பரவலாக பெய்த மழை மற்றும் பனி காரணமாக தற்போது 30 க்கும் குறைவான வாக னங்களில் மட்டுமே கோயம்பேடு சந்தைக்கு பூக்கள் விற்பனைக்கு வரு கிறது. குறிப்பாக மல்லி, சாக்லேட் ரோஸ் உள் ளிட்ட பூக்களின் வரத்து வெ கு வ ா க குறைந்துவிட்டது.

இதன் காரணமாக சாமந்தி, ரோஜா, மல்லி ஆகிய பூக்களின் விலை திடீரென அதிகரித்து உள் ள து . வ ர த் து கு றை வ ா ல் ம ல் லிகை பூ ஒ ரு கிலோ ரூ. 2500 வரை விற் கப்படுகிறது.

இதேபோல் கடந்த வாரம் ஒரு கிலோ ரூ.100 க்கு விற்ற சாமந்தி பூ தற் போதுரூ.160க்கும், கிலோ ரூ.160க்கு விற்ற சாக்லேட் ரோஸ்ரூ.240க்கும், கிலோ ரூ.100க்கு விற்ற பன்னீர் ரோஸ் ரூ.160க்கும் விற் பனை செய்யப்பட்டு வரு கிறது.

# செம்மண் குவாரி முறைகேடு வழக்கு: அமலாக்கத்துறை அலுவலகத்தில் அமைச்சர் பொன்முடி ஆஜர்



சென்னை, டிச.19

கடந்த 2006ம் ஆண்டு முதல் 2011ம் ஆண்டு வரையில் நடைபெற்ற தி.மு.க. ஆட்சியில் கனிம வளம் மற்றும் சுரங் கத்துறை அமைச்சராக இருந்தவர் பொன்முடி. அப்போது விழுப்புரம் மாவட்டம் பூத்துறையில் செம்மண் எடுப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்ட தில் முறைகேடு நடந்த தாக குற்றச்சாட்டு எழுந் தது.

இது தொடர்பாக 2012 ம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியின்போது பொன் முடி உள்ளிட்ட 8 பேர் மீது வழக்கு போடப்பட் டது. விழுப்புரம் குற்றப்பிரிவு போலீசார் செம்மண் முறைகேடு தொடர்பாக ரூ.28.36 கோடி இழப்பீடு ஏற்ப டுத்தியதாக குற்றம் சாட் டப்பட்டிருந்தது.

இந்த விவகாரம் தொடர்பாக அமலாக்கத் துறை அதிகாரிகள் பொன் முடிக்கு சொந்தமான இடங்களில் ஏற்கனவே சோதனை நடத்தியுள்ள னர். அவரிடம் விசார ணையும் நடத்தப்பட் டுள்ளது.

இந்த நிலையில் அமைச்சர் பொன்முடி நுங்கம்பாக்கத்தில் உள்ள அமலாக்கத்துறை அலுவ லகத்தில் இன்று ஆஜரா னார். செம்மண் முறை கேடு வழக்கு தொடர்பாக அவரிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தி தக வல்களை சேகரித்து உள் ளனர்.

# சாம்சங் தொழிலாளர்கள் உண்ணாவிரத போராட்டம்



ஸ்ரீபெரும்புதூர், டிச.19

ஸ்ரீபெரும்புதூர் அருகே சுங்குவார்சத்திரம் சிப்காட் டில் சாம்சங் நிறுவன தொழிற்சாலை உள்ளது. இங்கு பணியாற்றும் ஊழி யர்கள் கடந்த செப்டம்பர் மாதம் தொழிற்சங்கம் உள் ளிட்ட பல்வேறு கோரிக் கைகளை வலியுறுத்தி ஒரு மாதத்திற்கு மேல் போராட் டத்தில் ஈடுபட்டனர். பின் னர் அரசு சார்பில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு போராட்டம் முடிவுக்கு வந்தது. ஊழியர்கள் பணிக்கு திரும்பினர்.

இந்த நிலையில் சாம்சங் நிறுவன ஊழியர்கள் நாளைமறுநாள் (19ந்தேதி) ஒரு நாள் அடையாள உண் ணாவிரத போராட்டத்தை அறிவித்து உள்ளனர். தொழிலாளர்கள் மீது பழி வாங்கும் நடவடிக்கை யில் ஆலை நிர்வாகம் ஈடு படுவதாக ஊழியர்கள் குற்றம்சாட்டி உள்ளனர்.

போராட்டத்தில் ஈடு பட்டு திரும்பிய பெரும் பாலான தொழிலாளர்க ளுக்கு முந்தைய பணி வழங்கப்படவில்லை என் றும் 40க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு நிர் வாகம் எச்சரிக்கை நோட் டீஸ் அனுப்பியதாகவும் கூறப்படுகிறது.

மேலும் நிர்வாகத்தின் அழுத்தம் தாங்காமல் ஊழியர் ஒருவர் தற்கொ லைக்கு முயன்றதால் சி.ஐ.டி.யூ. போராட்டம் நடத்த முடிவு எடுத்து இருப்பதாக தெரிகிறது. தொழிற்சாலைக்கு உள் ளேயே அடையாள உண் ணாவிரத போராட்டம் நடைபெறும் என்று அறி விக்கப்பட்டு உள்ளது.

# பழனியில் 2ம் கட்டமாக அறுபடை வீடுகளுக்கு ஆன்மிக பயணம் தொடக்கம்



பழனி, டிச.19

தமிழகத்தில் அறு படை வீடுகளாக போற் ற ப் ப டு ம் திருப்பரங்குன்றம், திருச் செந்தூர், பழனி, சுவாமி மலை, திருத்தணி, பழமு திர்சோலை ஆகிய கோவில்களுக்கு கட்ட ணமில்லாமல் 60 வயது முதல் 70 வயதுக்கு உட் பட்ட 200 பேரை ஆண் டுக்கு 5 முறை அதாவது 1,000 பக்தர்களை அழைத்து சென்று தரிச னம் செய்ய வைக்கும் திட்டத்தை அறநிலையத் துறை தொடங்கியது. கடந்த ஆண்டு தொடங் கப்பட்ட இந்த பயணத் தில் 1000க்கும் மேற் பட்ட பக்தர்கள் அறுபடை வீடுகளை தரி சனம் செய்தனர்.

2ம் கட்டமாக இந்த ஆண்டும் ஆன்மிக பய ணம் செல்லும் திட்டம் இன்று பழனியில் தொடங்கியது.

அவர்கள் இன்று காலை பழனியில் இருந்து அறு படை வீடுகளுக்கு ஆன் மீகப் பயணத்துக்கு புறப் பட்டு சென்றனர். இதில் திண்டுக்கல், திருப்பூர், ஈரோடு, கோவை பகுதிக ளைச் சேர்ந்த 200 மூத்த குடிமக்கள் இடம் பெற்றி ருந்தனர். அவர்கள் பஸ்க ளில் நேற்று பழனிக்கு அழைத்து வரப்பட்ட னர். அவர்களை பழனி கோவில் அதிகாரிகள் வர வேற்றனர். நேற்றிரவு பழனி மலைக்கோவி லுக்கு சென்ற மூத்த குடி மக்கள் தண்டாயுதபாணி சுவாமியை தரிசனம் செய்தனர். அவர்களுக்கு கோவில் நிர்வாகம் சார் பில் பிரசாதம் வழங்கப் பட்டது.

பின்னர், இன்று காலை அவர்கள் பழனியில் இருந்து மதுரை மாவட் ட ம் திருப்பரங்குன்றத்துக்கு புறப்பட்டு சென்றனர். அவர்களை பழனி சார் ஆட்சியர் கிஷன் குமார், கோவில் துணை ஆணை யர் வெங்கடேஷ், உதவி ஆணையர் லெட்சுமி, நக ராட்சி தலைவர் உமா மகேஸ்வரி, துணை தலைவர் கந்தசாமி உள் ளிட்டோர் வழியனுப்பி வைத்தனர். இவர்களுக்கு அறநிலையத்துறை சார் பில் உணவு, போர்வை, துண்டு, சோப்பு, பிரஷ் உள்ளிட்ட அனைத்து பொருட்களும் இலவச மாக வழங்கப்படுகிறது என் ப து குறிப்பிடத்தக்கது.

# பா.ஜ.க. பிரமுகர் மர்ம மரணம் ஆஸ்பத்திரியில் கட்சியினர் குவிந்ததால் பரபரப்பு

வேலூர், டிச.19

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பத்தை சேர்ந்தவர் விட் டல் குமார் (வயது 40). பா.ஜ.க. ஆன்மீக பிரிவு மாவட்ட துணை தலைவராக இருந்து வந்தார். அந்தப் பகுதியில் இவர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டார். அவரை அடுக் கம்பாறை அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு சிகி ச்சை பலனின்றி விட்டல் குமார் இறந்தார். அந்த பகுதியை சேர்ந்த சிலர் திட்டமிட்டு தாக்கியதால் விட்டல் குமார் படு காயம் ஏற்பட்டு இறந்துள்ளார். அவர் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் எனக்கூறிய அவருடைய குடும்பத்தி னர் விட்டல்குமார் உடலை வாங்க மறுத்தனர். மேலும் பாஜகவினர் 50க்கும் மேற்பட்டோர் அடுக்கம்பாறை அரசு ஆஸ்பத்திரியில் குவிந்தனர். இதை தொடர்ந்து அங்கு போலீசார் குவிக்கப்பட்டனர். விட்டல் குமாரை கொலை செய்த குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய வேண் டும். அதுவரை உடலை வாங்க மாட்டோம். போராட்டத் தில் ஈடுபடுவோம் என பா.ஜ.க .வினர் தெரிவித்தனர். அவர்களிடம் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தினர். அடுக் கம்பாறை அரசு ஆஸ்பத்திரியில் போலீஸ் குவிப்பு மற்றும் பா.ஜ.க.வினர் திரண்டதால் பெரும் பரபரப்பு நிலவியது.

# நாய் மீது பஸ்சை ஏற்றிய டிரைவர் பணியிடை நீக்கம்

மதுரை, டிச.19

மதுரை மாவட்டம் செக்கானூரணி அரசு போக்குவரத்துக்கழக பணிமனையில் நமசிவாயம் என்பவர் டிரைவராக பணியாற்றி வருகிறார். சம்பவத்தன்று பஸ்சை பணிமனையில் இருந்து சோழவந்தான் பஸ்நிலையத்துக்கு ஓட்டி வந்தார்.

அப்போது ஒரு நாய் மீது பஸ் மோதிவிட்டது. இதில் நாய் கால் முறிந்தது. ஆனால், அந்த பஸ் நிற்காமல் சென்றுவிட்டதாககூறப்படுகிறது. இதை பார்த்த வக்கீல் ஒருவர் பணிமனைக்கு புகார் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் விசாரணை செய்த பணிமனை நிர்வாகம், புகார் உண்மை என தெரியவந்ததால், அடிபட்ட நாயை சிகிச்சைக்கு கொண்டு செல்லாமல், பணியில் அஜாக்கிரதையாக நடந்து கொண்டதாக டிரைவர் நமசிவாயத்தை பணியிடை நீக்கம் செய்து உத்தர விட்டது.

# தமிழகத்தில் பைக் டாக்சி இயங்க தடையில்லை: அரசுக்கு தொழிலாளர்கள் நன்றி



சென்னை, டிச.19

தமிழகத்தில் பைக் டாக்சி இயங்க தடையில்லை என்று அறிவித்த தமிழக அரசுக்கு பைக் டாக்சி தொழிலாளர்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அச்சங்கத்தினர் வெளியிட்ட அறிக்கையில்,

தமிழகத்தில் நகர்ப்புற போக்குவரத்தை மேம்படுத்துவதில் பைக் டாக்சிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இதன் மூலம் மாநில அரசுக்கு நூற்றுக்கணக்கான கோடிகளில் வருவாயும் கிடைக்கிறது. தேவையான நேரத்தில் வேலை, போதிய வருமானம் போன்றவற்றை வழங்குவதன் மூலம் பொருளாதார ரீதியாக ஒருவர் சுதந்திரம் பெறுவதோடு, பைக் டாக்சி தொழில் பொருளாதாரத்துக்கும் பங்களிப்பு செய்கிறது.

இத்தகைய சூழலில் பைக் டாக்சி தொழிலாளர்களுக்கு ஆதரவளித்த தமிழக அரசுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இதன் மூலம் நிலையான வருமானத்தை ஈட்டி, தொழிலாளர்கள் கண்ணியமிக்க வகையில் வாழ முடியும். மேலும் அரசுடன் ஒருங்கிணைந்து அனைவருக்குமான நிலையான போக்குவரத்தை வழங்குவதற்கு உறுதுணையாக இருப்போம் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# சென்னையில் 21ந் தேதி அ.தி.மு.க. சார்பில் கிறிஸ்துமஸ் விழா: எடப்பாடி பங்கேற்பு



சென்னை, டிச.19

அ.தி.மு.க. தலைமைக் கழகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

அ.தி.மு.க. சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு அரணாக என்றென்றும் விளங்கி வருகிறது. மறைந்த முன்னாள் முதல்அமைச்சர் ஜெயலலிதா கிறிஸ்தவப் பெருமக்களை கவுரவிக்கும் விதமாக, கட்சியின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்துமஸ் பெருவிழா நிகழ்ச்சியை நடத்தி வந்துள்ளார்கள். ஜெயலலிதாவை தொடர்ந்து அ.தி.மு.க. சார்பில், கட்சியின்பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமியும் கிறிஸ்துமஸ் பெருவிழா நிகழ்ச்சியை தொடர்ந்து நடத்தி வருகின்றார்.

அந்த வகையில், இந்த ஆண்டு வருகின்ற 21.12.2024 சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் சென்னை கீழ்பாக்கம் சி.எஸ்.ஐ. லைட் ஆடிட்டோரியத்தில் கிறிஸ்துமஸ் பெருவிழா நிகழ்ச்சியை நடத்த உள்ளார்.

இந்த நிகழ்ச்சியில், கிறிஸ்தவ பேராயர்கள், ஆயர்கள், போதகர்கள் மற்றும் கிறிஸ்தவப் பெருமக்களும், தலைமைக் கழக செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், எம்.பி. எம்.எல்.ஏ.க்கள், முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்டோரும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# எடப்பாடி பழனிசாமியை பற்றி பேச கே.என்.நேருவுக்கு அருகதை இல்லை: அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தாக்கு



சென்னை, டிச.19

அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

அச்சம் என்ற சொல்லே அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் அகராதியில் கிடையாது. "மக்களுக்காக உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றுவோம்" என்று எடப்பாடி பழனிசாமி சட்டசபையில் கர்ஜித்தபோது எதிர் பக்கத்தில் இருந்த முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான மொத்த திமுக கூட்டமும் பயந்து நடுங்கியதை தமிழ்நாட்டு மக்கள் பார்த்த பிறகும். எங்களைப் பார்த்து பயம் என்ற சொல்லை திமுக பயன்படுத்துவது வேடிக்கையின் உச்சம்.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னால், பல நூறு கோடி ரூபாய் கடன்களுக்குச் சொந்தக்காரர்களான உங்களுடைய குடும்பத்திற்கு, தற்போது அத்தனை கடனையும் அடைப்பதற்கு எங்கிருந்து பணம் வந்தது? மீண்டும் செல்வச் சீமானாக வலம் வருவது எப்படி என்பதை "பயம்" இல்லாமல் சொல்வாரா பம்(மிய)மல் நேரு?. நிதி அமைச்சராக இருந்து, இப்போதும் அமைச்சராக இருக்கும் பழனிவேல் தியாகராஜன் ஒரு ஆடியோவில், குறுகிய காலத்தில் சுமார் 30,000 கோடி ரூபாயை ஸ்டாலின் குடும்பத்தைச் சேர்ந்த இருவர் சுருட்டியதாகச் சொன்னாரே யார் அவர்கள் என்று "பயம்" இல்லாமல் சொல்வாரா அமைச்சர் கே.என். நேரு?.

ந்த 30,000 கோடி ரூபாய் உட்பட உங்களுடைய அனைத்து ஊழல்களும் அம்பலப்படும் என்பதால், ரெய்டுக்கும், வருமானவரித் துறைக்கும், அமலாக்கத்துறைக்கும் "பயந்து" இந்தியா கூட்டணியில் இருந்தும்கூட, பா.ஜ.கவின் தலைவர்களில் ஒருவரான மத்திய மந்திரி ராஜ்நாத்சிங்கை அழைத்து கருணாநிதி நாணயத்தை வெளியிட்டு, 'சூரியன்தாமரை' கூட்டணியை தமிழ் நாட்டு மக்களுக்கு திரையிட்டுக் காட்டியவர்களே நீங்கள் தானே.

டங்ஸ்டன் சுரங்கம் பற்றி பிதற்றியுள்ளார் அமைச்சர் நேரு. டங்ஸ்டன், கிராபைட் உள்ளிட்ட 10 வகை கனிமங்களை அரியவகை கனிமங்களாக அறிவித்தும், அவற்றை ஏலமிடும் உரிமை மத்திய அரசிற்கு மட்டுமே உள்ளது போன்ற பல திருத்தங்கள் அடங்கிய கனிம வள திருத்தச் சட்டம் 2023 நாடாளுமன்றத்தில் கொண்டு வந்த போது, திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்தார்கள் என்பதை அச்சமின்றி சொல்வாரா பம்மல் நேரு? மேலும், 2023, அக்டோபர் மாதம் திமுக அரசு மத்திய சுரங்கத் துறை அமைச்சகத்திற்கு எழுதிய கடிதத்தில் 'டங்ஸ்டன் உள்ளிட்ட அரிய வகை கனிமங்களை ஏலம் விடும் உரிமையை மாநில அரசுக்கே வழங்க வேண்டும்' என்று கோரியதே தவிர, கனிம வள திருத்தச் சட்டத்தை ரத்து செய்யக் கோரியோ, டங்ஸ்டன் சுரங்க ஏலத்தை ரத்து செய்யக் கோரியோ ஏன் கடிதம் எழுதவில்லை? என்பதை பயமில்லாமல் விளக்குவாரா அமைச்சர் கே.என்.நேரு.

நீட் என்றால் பயம்..! மேகதாது என்றால் பயம்..! மத்தியில் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும்போது கலைஞர் டி.வியில் ரெய்டு பயம்..! குடையின் நிறத்தையே மாற்றி வெள்ளைக் குடை காட்டும் அளவுக்கு பயம்...! பிரஸ் மீட் என்றால் பயம்..! சட்டப் பேரவை என்றால் பயம்..! நேரலை என்றால் இன்னும் பயம்...! தற்போது டங்ஸ்டன் என்றால் பயம்...! சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பேச எழுந்தாலே பயமோ பயம்...! காற்றடித்தால் பயம் துண்டுச் சீட்டு பறந்துவிடுமே என்பதால்..! அதனால்தான், 2 நாட்களில் சட்டமன்றத்தையே நடத்தும் ஸ்டாலின், எங்கள் கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனி சாமி அவர்களுடைய அறிக்கைகளுக்கு நேரடியாக பதில் அளிக்காமல், தனது அடிமை மந்திரிகள் மூலம் பதில் அளிக்கிறார் என்பதை அமைச்சர் கே.என்.நேரு பயமில்லாமல் மக்களுக்கு தெளிவுபடுத்துவாரா?

அரசியல் ரீதியாக எடப்பாடி பழனிசாமியை சந்திக்கத் திராணியற்ற, துணிவற்ற, அறிவாலய அறிவிலிகள், தனி மனிதத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளது, எதிர்காலம் தரப்போகும் தோல்வியை உணர்ந்ததால் என்பதை சிறு பிள்ளைகூட உணரும். திருச்சியின் தி.மு.க. தாதா தான்தான் என்று கூறும் இந்த நபரை, அந்த மாவட்டத்தைச் சேர்ந்த மற்றொரு மந்திரியான அன்பில் மகேஷ் மற்றும் எம்.எல்.ஏ.க்கள் மதிக்காத நிலைதான் உள்ளது. தங்களை சம்பாதிக்கவிடாமல், தொழில் செய்யவிடாமல் செயல்படுவதாக, சொந்தக் கட்சியினரே புலம்புகிறார்கள்.

தன் மகன் அருண் நேருவை நாடாளுமன்ற உறுப்பினராகவும், மற்றும் மாப்பிளைக்கும், வாரிசுக்கும் இவர் கால் கழுவியதை சொல்லிச் சொல்லி திருச்சி உடன்பிறப்புகள் காரி துப்புகிறார்கள். தன்மான சிங்கமாக பீடு நடைபோடும் எடப்பாடி பழனிசாமியை பற்றி பேசுவதற்கு, இவருக்கு எந்த அருகதையும் இல்லை.

"பயம்" மட்டுமே உருவான உண்மையான கோழை, மு.க.ஸ்டாலினின் சீனியர் கொத்தடிமையாக இருந்து, மாநகராட்சி கவுன்சிலர்களின் அடிதடிகளை கட்டப் பஞ்சாயத்து செய்வதையே முழுநேர வேலையாகக் கொண்டிருக்கும் நேருவுக்கு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி பேசுவதற்கு எள்ளளவும் அருகதை இல்லை.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# என் வாழ்வில் தாக்கம் ஏற்படுத்தியவர் அஜித் நடிகை மஞ்சு வாரியர்



இயக்குனர் வெற்றிமாறன் இயக்கத்தில் கடந்த ஆண்டு வெளியான திரைப்படம் 'விடுதலை'. இந்த படத்தில் நடிகர் சூரி கதாநாயகனாக நடிக்க அவருடன் இணைந்து விஜய் சேதுபதி முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். இந்த படம் ரசிகர்கள் மத்தியில் வசூல் ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றது. இந்த படத்தின் வெற்றியை தொடர்ந்து இதன் இரண்டாவது பாகம் உருவாகியுள்ளது. விடுதலை 2 படத்தில் சூரி, விஜய் சேதுபதி ஆகியோருடன் இணைந்து பிரகாஷ்ராஜ், சேத்தன், மூணார் ரமேஷ், பவானிஸ்ரீ, இளவரசு, பாலாஜி சக்திவேல், மஞ்சுவாரியர், கிஷோர், போஸ் வெங்கட் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படத்திற்கும் இசைஞானி இளையராஜா இசையமைத்துள்ளார். இந்த படத்தின் படப்பிடிப்பு பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், இப்படம் வருகிற 20ந் தேதி வெளியாக உள்ளது. இந்தப் படத்தில் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக மஞ்சு வாரியர் நடித்துள்ளார்.

மலையாள நடிகையாக இருந்தாலும், தமிழ் ரசிகர்கள் மத்தியிலும் மிகவும் பிரபலமானவர் மஞ்சு வாரியர். குறிப்பாக, நடிகர் தனுஷ் உடன் இணைந்து 'அசுரன்' படத்தில் நடித்த பின்பு தமிழ்நாட்டில் பிரபலமானார். பின்னர் அஜித் உடன் 'துணிவு' படத்தில் இணைந்து நடித்தார். அதன்பின்னரே நடிகை மஞ்சுவாரியருக்கு பைக் டிராவல்கள் மீது ஈர்ப்பு அதிகமாகியது என்று சொல்லப்படுகிறது. ஏனெனில், துணிவு படத்தில் நடித்துக் கொண்டிருந்த போதுதான், நடிகர் அஜித்தை போல் விலை உயர்ந்த பி.எம்.டபிள்யூ பைக்கை மஞ்சு வாரியர் வாங்கினார். அதன்பின் அந்த பைக்கில் அஜித்துடன் இணைந்து இந்தியாவில் நிறைய இடங்களுக்கு மஞ்சு வாரியர் பைக் பயணம் சென்று உள்ளார்.

நடிகை மஞ்சுவாரியர் நடிகர் அஜித்குமார் தனது வாழ்க்கையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக நேர்காணல் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

விடுதலை 2 படத்தின் புரமோஷன் நிகழ்ச்சி ஒன்றில் பங்குபெற்ற மஞ்சு வாரியர் கூறியதாவது: அஜித்குமார் சார் பேசுவதை கேட்டுக்கொண்டே இருக்கலாம். அவ்வளவு அருமையாக பேசுவார். எனக்கு சிறிய வயதில் இருந்தே பைக் ஓட்ட வேண்டும் என்பது ஆசை. நான் எனது பக்கெட் லிஸ்டில்கூட இதுபற்றி எழுதி வைத்திருக்கிறேன். அஜித் சாருக்கு பைக் மீதிருக்கும் ஆர்வம் என்னையும் ஏதாவது செய்ய வேண்டுமென தூண்டியது. அவருக்கு பிடித்ததை செய்ய நேரம் ஒதுக்கி செய்கிறார். நமக்கு பிடித்ததை செய்ய அஜித் சாரைப் பார்த்து நானும் ஊக்கமடைந்திருக்கிறேன். நமக்கு பிடித்ததை செய்ய அவரும் ஒரு காரணமாக இருக்கிறார். நாம் சரியாக பயன்படுத்தினால் அதுவும் சரியாக வேலை செய்யும் என அஜித் கூறியதாகக் கூறினார்.

# தெலுங்கில் கதாநாயகனாக அறிமுகமாகும் விஜய் சேதுபதி?



இயக்குனர் வெற்றிமாறன் இயக்கத்தில் கடந்த ஆண்டு வெளியான திரைப்படம் 'விடுதலை'. இந்த படத்தில் நடிகர் சூரி கதாநாயகனாக நடிக்க அவருடன் இணைந்து விஜய் சேதுபதி முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். இந்த படம் ரசிகர்கள் மத்தியில் வசூல் ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றது.

இப்படத்தின் வெற்றியை தொடர்ந்து இதன் இரண்டாவது பாகம் உருவாகியுள்ளது. இதில் பிரகாஷ்ராஜ், சேத்தன், மூணார் ரமேஷ், பவானிஸ்ரீ, இளவரசு, பாலாஜி சக்திவேல், மஞ்சுவாரியர், கிஷோர், போஸ் வெங்கட் உள்ளிட்ட பலர் இப்படத்தில் நடிக்கின்றனர். இந்த படத்திற்கும் இசைஞானி இளையராஜா இசையமைத்துள்ளார்.

'விடுதலை 2' படம் வரும் 20ம் தேதி வெளியாகவுள்ள நிலையில் அதற்கான புரமோஷன் பணிகளில் தீவிரமாகியுள்ளார் நடிகர் விஜய் சேதுபதி. அதன்படி, தெலுங்கில் படத்தின் புரமோஷனில் ஈடுபட்டிருந்த விஜய் சேதுபதி, விரைவில் தெலுங்கில் கதாநாயகனாக நடிக்க வாய்ப்புள்ளதாக கூறினார்.

இது குறித்து அவர் கூறுகையில், "நான் தெலுங்கில் சில இக்குனர்களிடம் கதை கேட்டு வருகிறேன். விரைவில் அது நடக்கும்" என்றார். விஜய் சேதுபதி சிரஞ்சீவி நடித்த 'சைரா' படத்தின் மூலம் தெலுங்கில் அறிமுகமானார். இதையடுத்து சிரஞ்சீவியின் உறவினரான பாஞ்சா வைஷ்வன் தேஜ் கதாநாயகனாக அறிமுகமாக 'உப்பெனா' படத்தில் வில்லன் கதாபாத்திரத்தில் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜிம்பாப்வே ஆப்கானிஸ்தான் முதல் ஒருநாள் போட்டி மழையால் ரத்து



ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டி20, 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற டி20 தொடரை 21 என்ற கணக்கில் ஆப்கானிஸ்தான் கைப்பற்றியது. இதையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான ஒருநாள் தொடர் இன்று தொடங்குகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி ஹராரேவில் இன்று நடைபெற்றது . மழை காரணமாக இந்த போட்டி 28 ஓவர்களாக குறைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது..

இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது. அதில் டாஸ் வென்ற ஆப்கனிஸ்தான் அணியின் கேப்டன் ஹஷ்மதுல்லா ஷாஹிதி பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி ஜிம்பாப்வே அணி முதலில் பேட்டிங் செய்தது.

9.4 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு ஜிம்பாப்வே அணி 44 ரன்கள் எடுத்திருந்த போது மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. மழை தொடர்ந்து பெய்ததால் ஆட்டம் ரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

# பாலோ ஆனை தவிர்த்த இந்தியா: கொண்டாடிய கம்பீர் கோலி



இந்தியா ஆஸ்திரேலியா அணிகள் இடையிலான 3வது டெஸ்ட்கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனில் உள்ள கப்பா ஸ்டேடியத்தில் நடைபெற்று வருகிறது. மழையால் பாதிக்கப்பட்ட இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 117.1 ஓவர்களில் 445 ரன்கள் குவித்து ஆல் அவுட் ஆனது. ஆஸ்திரேலியா தரப்பில் அதிகபட்சமாக டிராவிஸ் ஹெட் 151 ரன்களும், ஸ்டீவ் ஸ்மித் 101 ரன்களும் எடுத்தனர். இந்திய தரப்பில் பும்ரா 6 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதனை தொடர்ந்து இந்திய அணி தனது முதல் இன்னிங்சில் பேட்டிங் செய்தது. தொடக்க ஆட்டக்காரர்களாக ஜெய்ஸ்வாலும், கே.எல்.ராகுலும் களமிறங்கினர். இதில் ஜெய்ஸ்வால் 4 ரன்னிலும், அடுத்து வந்த கில் 1 ரன்னிலும், விராட் கோலி 3 ரன்னிலும், ரிஷப் பண்ட் 9 ரன்னிலும், அவுட் ஆகினர். நேற்றைய ஆட்ட நேர முடிவில் ராகுல் 33 ரன்னுடனும், ரோகித் ரன் எடுக்காமலும் களத்தில் இருந்தனர். இந்நிலையில் இன்று 4ம் நாள் ஆட்டம் நடைபெற்றது.

இதில் ரோகித் 10 ரன்னில் அவுட் ஆனார். தொடர்ந்து ராகுலுடன் ஜடேஜா ஜோடி சேர்ந்தார். இருவரும் நிதானமாக ஆடி ரன்கள் சேர்த்தனர். இதில் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய ராகுல் 84 ரன்னில் அவுட் ஆனார். தொடர்ந்து களம் இறங்கிய நிதிஷ் குமார் ரெட்டி 16 ரன்னிலும், முகமது சிராஜ் 1 ரன்னிலும் அவுட் ஆகினர். இதையடுத்து ஜடேஜா உடன் பும்ரா ஜோடி சேர்ந்தார். நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த ஜடேஜா அரைசதம் அடித்த நிலையில் 77 ரன்னில் அவுட் ஆனார். இதனால் இந்திய அணி 213 ரன்னுக்கு 9 விக்கெட்டுகளை இழந்தது. 246 ரன் எடுத்தால் பாலோ ஆனை தவிர்க்கலாம் என்ற நிலையில் பும்ரா உடன் ஆகாஷ் தீப் ஜோடி சேர்ந்தார். இந்த இணை நிதானமாக ஆடி ரன்கள் சேர்த்தது. இறுதியில் 4ம் நாள் ஆட்ட நேர முடிவில் இந்தியா தனது முதல் இன்னிங்சில் 9 விக்கெட்டுகளை இழந்து 252 ரன்கள் எடுத்து பாலோ ஆனை தவிர்த்தது. இந்தியா தரப்பில் பும்ரா 10 ரன்னுடனும், ஆகாஷ் தீப் 27 ரன்னுடனும் களத்தில் உள்ளனர். இந்தியா இன்னும் 193 ரன்கள் பின்னிலையில் உள்ளது. நாளை 5ம் நாள் ஆட்டம் நடைபெறுகிறது. இந்த ஆட்டத்தில் இன்னும் ஒரு நாளே எஞ்சி உள்ளதால் இந்த ஆட்டம் டிராவில் முடிவது உறுதியாகிவிட்டது.

இந்த நிலையில், இந்திய அணி பாலோ ஆனை தவிர்த்த நிலையில், தலைமை பயிற்சியாளர் கம்பீர் மற்றும் விராட் கோலி ஆகியோர் ஓய்வறையில் இருந்து சந்தோசத்தில் துள்ளி குதித்தனர். இது தொடர்பான வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது .

# எனக்கு ஆதரவாக இருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து கொள்கிறேன் குகேஷ்



சிங்கப்பூரில் நடந்த உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் 14 சுற்றுகள் முடிவில் இந்திய கிராண்ட்மாஸ்டர் குகேஷ் 7.5  6.5 என்ற புள்ளி கணக்கில் சீனாவின் டிங் லிரெனை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை தனதாக்கினார். இதன் மூலம் சென்னையை சேர்ந்த 18 வயதான குகேஷ் உலக சாம்பியன் பட்டத்தை குறைந்த வயதில் வென்ற வீரர் என்ற வரலாறு படைத்தார். அத்துடன் இந்த பட்டத்தை வென்ற 2வது இந்தியர் என்ற பெருமையையும் பெற்றார்.

இந்த நிலையில் உலக செஸ் சாம்பியன் பட்டத்தை வென்ற குகேஷ் நேற்று காலை சிங்கப்பூரில் இருந்து ஏர் இந்தியா விமானம் மூலம் சென்னை திரும்பினார். விமான நிலையத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இதையடுத்து விமான நிலையத்தில் குகேஷ் கூறுகையில், உலக சாம்பியனாக சென்னை திரும்புவது மகிழ்ச்சி அளிக்கிறது. நீங்கள் அளித்த அன்பும், ஆதரவும் நான் உலக சாம்பியன் பட்டம் வெல்ல நிறைய ஊக்கம் அளித்தது. இந்த வெற்றியை எல்லோரும் சேர்ந்து கொண்டாடுவோம். எனக்கு ஆதரவாக இருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.